21-2-1994

Registered as a Newspaper

பக்கங்கள் 6 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மாசி 9 | (21.02.94) | திங்கட்கிழமை | ஓசை 03

## கப்பல் கட்டணம் வசூலிப்பதற்கு வெகுஜன அமைப்புக்கள் கண்டனம்

யாழ்: குடாநாட்டுக்குள் கப்பல்மூலம்எடுத்து வரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை மக்களிடமிருந்து அரசு அறவிடுகிறது. இவ்வாறு கட்டணம் அறவிடுவதை யாழ்: மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது. கப்பல் கட்டணத்தை கச்சிதமாக வசூலிப்பதற்காக குடாநாட்டில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு கப்பல் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று (6ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவிலிருந்து 500 கோடி ரூபா ஆயுதம்

# கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்தது!

## 700 தொன் எடையுடையதாகத் தகவல்

[கொழும்பு]

சிறிலங்கா ஆயுதப்படையினருக்கென 500 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் சீனாவிலிருந்து கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருக்கிறது. சுமார் எழுநூறுக்கும் அதிகமான தொன் உடைய இந்த ஆயுதங்கள், துறைமுகத்திலிருந்து இறக்கப்பட்டு இராணுவக் களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஞாயிறு வாரப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சிறிலங்காவின் பாதுகாப்புத் துறையைப் பொறுத்தமட்டில் ஒரு கப்பல் நிறைய 500 கோடிரூபா ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டது இது முதல் சம்பவம் என வர்ணிக்கப்படுகின்றது.

சீனாவிலிருந்து வந்துள்ள இந்தக் கப்பலில பீரங்கித் தோட்டாக்கள், மோட்டார் குண்டுகள், கிரனைற்றுக்கள், பெருந்தொகையான துப்பாக்கித் தோட்டாக்கள், தொழில்

அடுத்த மார்ச் மாதம் அல்லது ஏப்ரல் மாதத்தில் ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள எம். ஐ -8 ரக விமானங்களும், மே மாதத்தில் தென்னாபிரிக்காவிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள பவள் என்றழைக்கப்படும் யுத்த நடவடிக்கைகளுக்கென ஈடுபடுத்தப்படும் வாகனங்களும் கொழும்பை வந்தடைய இருக்கின்றன.

வருட ஆரம்பத்திலேயே யுத்த உபகரணங்களுக்கும், விமானங்களுக்கும், வாகனங்களுக்குமாக சுமார் ஆயிரம் கோடிரூபாவிற்குமேல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தவாரம் அதி நவீன வள்ளமொன்று வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த ஆயுதக் கொள்வனவை அவதானிக்கும் போது மார்ச் மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ள கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலைஅடுத்து வடக்கில் பாரிய இராணுவநடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படுவது உறுதி என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட பத்தாயிரம் பேரைக் கொண்ட ஒன்பது படைப்பிரிவுகள் கிழக்கு மாகாண தேர்தல் கடமைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன தேர்தல் முடிந்தவுடன் அப் படைப்பிரிவுகளை வடபகுதிக்கு அனுப்பிவைக்கத் திட்டமிடப்படுவதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது.

## சிறிலங்காவில்பாகிஸ்தான்நடவடிக்கை இந்திய அரசு ஆட்சேபம்

(சென்னை)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக சிறிலங்காவில் உள்ள பாகிஸ்தானிய தூதரகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து சிறிலங்கா வெளியுறவு அமைச்சிடம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள் ஆட்சேபம் தெரிவித்துள்ளதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்றாவது நாடு ஒன்றிற்கு எதிராக படமொன்றை திரையிடுவது குறித்தோ பிரசுரங்களை பிரசாரப்படுத்துவது குறித்தோ பகிரங்கமாக அறிவிப்பது ராஜதந்திர நடைமுறைகளுக்கு இசைவானதாக இல்லை இதை நாம் சிறிலங்கா அரசின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்

அலட்சியம் செய்வதே புத்திசாலித்தனமானது என இந்தியா நினைக்கின்றது என இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றைவிட பாகிஸ்தானிய ஏஜண்டுகள் ஊடுருவுவதற்கான இன்னோர் மையமாக கொழும்பு மாறுவதை தடுப்பதிலேயே இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தானிய புலனாய்வுச் சேவையினால் பயிற்றுவிக்கப்பட்ட நபர்கள் காத்மண்டு மற்றும் டாக்கா ஊடாக ஊடுருவுவது குறித்து அண்மையில் இந்தியா விசனம் தெரிவித்திருந்தது.

மூன்றாவது நாட்டின் பிரஜை எவராவது சிறிலங்கா

இந்திய தூதரகம் ஊடாக அவரது நடவடிக்கைகள் பற்றி அறிந்து ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளாமல் விசாவை வழங்கக் கூடாது என கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்திற்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் அண்மையில் கொழும்பில் உள்ள ஏஜென்சிகள் ஊடாக மோசடி செய்யப்பட்ட விசாக்களைப் பெற்று கொழும்பிலிருந்து ஆப்கானிஸ்தானியர்கள் குழுவொன்று சென்னை சென்றிருந்தது. இந்தியாவிற்கு வர விரும்புவோருக்கு போலி கடவுச் சீட்டுக்களையும் விசாக்களையும் விநியோகிக்கும்

திற்கு கொண்டுவந்திருக்கின்றோம். இந்தியாவுக்கு எதிராக வழமையாக மேற்கொள்ளும் பிரசாரத்தை ஜை எவராவது சிறிலங்காவிலிருந்து இந்தியாவுக்கு வர விரும்பினால் அவரது சொந்த நாட்டில் உள்ள

வுச் சீட்டுகளையும் விசாக்களையும் விநியோகிக்கும் ஏஜென்ஸிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தீவிரப்படுத்துமாறு சிறிலங்கா வெளியுறவு அமைச்சிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்துப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

கித் தோட்டாக்கள், தொழில் உதிரிப்பாகங்கள், கனரக இராணுவ வாகனங்கள் ஆகியன அடங்கியிருக்கின்றன.

இவற்றின் எடை 700 தொன்னையும் தாண்டியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதங்களைத்தவிர

# பொலிஸ்மாஅதிபரின் மகள் 30 களவுகளுடன் தொடர்பு

(கொழும்பு)

கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் முப்பதுக்கும் அதிகமான களவுகளில் ஈடுபட்டதற்காக முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் மகள் நாரன்பிட்டிய பொலிசினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின்சார உபகரணங்கள் மற்றும் பெறுமதி மிக்க பொருள்களை வீடுகளில் இருந்து திருடிய குற்றத்திற்காகவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றவர்கள் உதவியின்றி களவுகளில் இவர் தன்னந் தனியாக ஈடுபட்டதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கையில் ஒரு கோர்வை திறப்புகளுடன் நடமாடி, இரவு வேளைகளில் வீட்டு உரிமையாளர் நித்திரை செய்யும்போது, கதவுகளைத் திறந்து இவர் களவாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. களவாடிய பணத்தைக் கொண்டு சந்தேகநபர் ஒரு வீட்டையும் கட்டியிருப்பதாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. களவாடப்பட்ட பொருள்களில் பலவற்றைப் பொலிஸார் மீட்டிருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் பற்றிய பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# கிருமிநாசினியில்குழறுபடி மிளகாய்க்கன்றுகள் நாசம்

(யாழ்ப்பாணம்)

கிருமிநாசினியின் போத்தலில் ஒட்டப்பட்டிருந்த பெயரொட்டி (லேபல்) ஒன்றாகவும் அதற்குள் இருந்த கிருமிநாசினி வேறொன்றாகவும் இருந்ததனால் பல்லாயிரம் ரூபா பெறுமதியான மிளகாய்ச் செடிகள் கருகி நாசமாகிய சம்பவம் ஒன்று கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்நகரப் பகுதியில் வசித்து வரும் இராயப்பு பிரான்சிஸ் பவுலப்பு என்பவர் கோண்டாவில் பகுதியில் 12 பரப்பு தோட்டம் ஒன்றை குத்தகைக்குப் பெற்று அதில் (6ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்திற்கு பயன்படாத கத்தி பலாக்காய் வெட்டுவதற்கா?

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கேட்கிறார்

(கொழும்பு)

''யுத்தத்திற்கு பயன்படாத கத்தி பலாக்காய் வெட்டவா? என்று சிங்களப் பழமொழி உள்ளது எனவே யுத்தத்திற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க பெருமளவு பணம் செலவாகிறது. பணம் இருப்பது தேவைக்கு செலவு செய்யவே நாட்டைக்காக்க எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை.'' என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில்பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யுத்தத்திற்காக வருடாந்தம் 25ஆயிரம் மில்லியன் ரூபா செலவாகின்றது. அவர்களை மந்திரம் சூனியம் செய்து வெல்ல முடியாது. யுத்தம் செய்து தான் வெல்லவேண்டியுள்ளது.

இந்நாட்டு சிறுபான்மையின மக்களுக்கு உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்று வாழ வாய்ப்பு உள்ளது. பெரும்பான்மையின மக்கள் இந்நாட்டில் மட்டுமே வாழ வேண்டியுள்ளது எனவே இந்நாட்டை இரண்டாக பிரிக்கவிடாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு பெரும்பான்மை இனத்தவரினதும் தலையாய கடமையாகும்.

வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வலுவான அரசாங்கம் ஒன்று தேவையாக உள்ளது வலுவான அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய சக்திமிக்க தேசியக் கட்சி ஐ. தே. கவாகும். பிளவுபடாது பலம்வாய்ந்த பெரும்பான்மை சமூகம் இருந்தால் மட்டுமே சிறுபான்மையினரின் பந்தோபஸ்துக்கு சிறந்த உத்தரவாதத்தை அளிக்கமுடியும்.

பெரும்பான்மை சமூகம் பிளவுபட்டிருக்கும் நிலையில் நான் பிரபாகரனோடு பேச்சு நடத்தினால் என்னநடக்கும்? விஜேதுங்கா பயங்கரவாதிகளுடன் பேச்சு நடத்துகிறார் என்று உடனடியாக யாராவது கூறமாட்டார்களா? அவர்கள் என் முதுகில் குத்த முனைவர் என ஜனாதிபதி விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

# 'கெந்தல' கப்பலில் வந்தமா சங்கம் மூலம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பல் இன்று மாலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும்என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் பெப்ரவரி மாதத்திற்கான நிவாரணப் பொருள்கள் ஏற்றிவரப்படுகின்றன. 1500 மெற்றிக் தொன் மா, 770 மெற்றிக் தொன் சீனி, 500 மெற்றிக் தொன் அரிசி ஆகியவற்றுடன் பால்மா வகைகள், ரவ்வை போன்றவையும் ஏற்றிவரப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், நேற்று வந்து சேர்ந்த கெந்தல கப்பலிலிருந்து ஏற்றி வரப்பட்ட ஆயிரத்து தொளாயிரத்து இருபத்திநான்கு மெற்றிக்தொன் மா உடன் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன.

கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் ஒரு கிலோ மா 16ரூபா 75 சதத்திற்கு விநியோகம் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இக்கப்பலில் தபால் பொதிகள் எதுவும் வரவில்லை.

இது இவ்வாறிருக்க ருகுணு கப்பல் நேற்று புறப்பட்டது.

# போராட்டகாலத்திற்கான புதிய கல்வித்திட்டம் அவசியம்

## பல்கலைக்கழக துணைவேந்தர் கருத்து

(வடமராட்சி)

தமிழீழம் கிடைக்க முன்னர் உள்ள இந்த கால கட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு தடையான காரணிகளை ஆராய வேண்டும். எமது கல்வியைத் திட்டமிடும் போது தமிழீழம் கிடைக்கும் வரை ஒரு கொள்கையையும் பின்னர் இன்னொரு கொள்கையையும் வகுக்க வேண்டும்.

இவ்வாறு ஹாட்லிக்கல்லூரியில் நேற்று பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ் மாவட்ட பாடசாலைகளின் கல்வித்தரத்தின் தேக்கநிலைக்கான காரணத்தை அறியுமுகமாக நடாத்தப்பட்ட கருத்தரங்கின் போது யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா தெரிவித்தார்.

இக்கருத்தரங்கு பழைய மாணவரான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர் தொடர்ந்து கருத்துரையாற்றும் போது 1990 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கான தொகை யாழ் மாவட்ட மாணவர்களைப் பொறுத்தளவில் குறைந்து வருகிறது. அது போன்றே க. பொ. த. சாதாரண கல்விப் பேறும் குறைந்து வருகிறது.

1992 இல் யாழ் மாவட்டம் முழுவதும் 15 பிள்ளைகளே 8 பாடத்திலும் ''டி'' சித்தியடைந்துள்ளனர் ஆனால் சிங்களப்பகுதியில் உள்ள ஒரு முன்னணிப் பாடசாலையிலேயே 40 க்கு மேற்பட்ட பிள்ளைகள் 8 'டி' பெற்றுள்ளனர். 1956 ஆம் ஆண்டிற்கு பின்னர், தமிழன் கல்விகண்டு சிங்களத்தலைவர்கள் பொறாமை கொண்டனர்.

அவர்கள் தரப்படுத்தல் போன்ற பல வழிகளில் தமிழ் மாணவர் கல்விக்கு தடை போட்டனர். தமிழரது கல்வி இன அழிப்பு போராட்டத்துடன் சேர்ந்தமையால் பாடசாலைகள் நூலகங்கள் என்பன அழிக்கப்பட்டன. அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பொருளாதாரத்தடை எனக் கூறி எரிபொருளைத் தடை செய்தது. உண்மையில் தமிழ் மாணவர்களின் கல்வியை பாதிக்க மேற்கொண்ட நடவடிக்கை இதுவாகும் ஆனபோதும் எமது மாணவர்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு



கப்டன்

அறிவழகன் (அறிவு)

கடந்த 05 - 01 - 94 அன்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படைக்கு புதிய அதிகாரி நிலை தளபதி

(கொழும்பு)

விமானப்படையின் அதிகாரிகள் நிலை தளபதியாக ஏயர் கொமடோர் என்சலன் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இப் பதவியை வகித்து வந்த ஒலிவர் ரணசிங்க விமானப்படையின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு என்சலன் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் ஏயர் கொமடோர் என்சலன் பீரிஸ் தற்போது ரஷ்யா சென்றுள்ளார்; விமானப்படைக்கு எம். ஐ. 8 ரக விமானங்களை வாங்குவதற்கு பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் குழுவிற்கு தலைமை தாங்கி சென்றுள்ளார். இவர் கொழும்பு திரும்பியதும் தனது புதிய பதவியை ஏற்றுக்கொள்வார்.

# துப்பாக்கி சூட்டில் சிறுவன் காயம்

(நமது நிருபர்)

அராலிக் கடற்பரப்பில் மீனவர்கள்மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது சிறுவர் ஒருவன் படுகாயமடைந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### சைனீஸ் உணவுசேவை

மதியஉணவு - மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி; சைவ உணவு - புரியாணி, பிறைட் றைஸ், நூடில்ஸ் வகை பார்சல் ஓடர்களுக்கும் நாடவும். காருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்; வேம்படி பாடசாலை முன்பாக. (7560)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

Hy-Line Brown, Hy Line-White கைலைன் பிறவுண், கைலைன் வெள்ளை பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு 999 வெளிநாட்டு மீன் தூள் உடன் விற்பனைக்குண்டு, மற்றும் 21-2-94 கோல்டன் கொமட் பேட்டு குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம் "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7567)

### அராலியூர் சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர்; அவரது நாடகங்களைப் பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். "கெட்டிக்காரர்கள்", "முதலாம் பிள்ளை" 30/-; (7638)

### காணவில்லை

ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த அல்சேஷன் நாய் (வயது 4) மதிக்கத்தக்கது. கறுப்பும் மஞ்சள் கலந்த நிறம் 18-02--1994இல் இருந்து காணவில்லை; இது தொடர்பாக ஆ. விஸ்வலிங்கம், 235, கச்சேரி - நல்லூர் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் தரப்படும். (7572)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (7547)

### பாலர் ஆசிரியர் ஆகலாம்

கடைசித் தகைமை க. பொ. த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர், தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (7578)

### விற்பனைக்கு

10 சைனா பான்ரெயில் விசிறிவால் புறாக்கள், ஒரு சோடி உழவு மாடு விற்பனைக்குண்டு. ந. வரதராசா, ராஜ்கோபால்ஸ் ஸ்டோர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (7574)

### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், ஐமக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வனம் இல. 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### காலம் பெறுமதியானது

மாணவர் சீருடைகளா? அலுவலக அணிகளா? துரித சலவைக்கு மில்க்வைற் சலவைத்தூள் இருக்கவே இருக்கிறது. அழுக்கு அகல்கிறது. பளிச்சிடும் வெண்மை பெறுகிறது. மில்க்வைற்சலவைத்தூள்வெற்றுப் பக்கற்25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பி அல்லது ஒரு உரையுடனும், ஆங்கில மொழி பெயர்ப்புடனும் உள்ள "ஆத்திசூடி" புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். "மில்க்வைற்" (சி-8675)

## பெறுமதி வாய்ந்த முத்திரைகள்

(யாழ்ப்பாணம்)

இம்முறை யாழ் மாவட்டத்திற்கு பெறுமதிமிக்க முத்திரைகள் போதிய அளவு எடுத்து வரப்பட்டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றை தற்சமயம் கொழும்பு சென்று திரும்பிய வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் தம்முடன் எடுத்து வந்துள்ளார்.

இவற்றுள் 1000 ரூபா, 500 ரூபா, 200 ரூபா, 300 ரூபா, 100 ரூபா மற்றும் அதற்குக் கீழ் பெறுமதியுள்ள முத்திரைகளும் அடங்குகின்றன. இம் முத்திரைகளை பொதுமக்கள் யாழ் பிரதான தபாலகம், சுண்டுக்குளி தபாலகம், வண்ணார்பண்ணைத் தபாலகம் மற்றும் பருத்தித்துறைதபாலகம் ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (பா)

## நிவாரணப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் அதன் பாவனையாளருக்கு தைமாதத்திற்கான நான்கு வார இலவச உலர் உணவு விநியோகத்தை 17-02-94ம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது. (88)

## கப்டன் அன்ராஜ் நினைவாக கல்விக்கழகம் திறப்பு

மன்னார் மாவட்டம் அடம்பனில் வட்டக்கண்டல் பகுதியில் அண்மையில் கப்டன் அன்ராஜ் நினைவாக கல்வி வளர்ச்சிக்கழகம் திறந்து வைக்கப்பட்டது இந்த நிகழ்வின் போது தமிழீழத் தேசிய கொடியை மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதி செபமாலை ஏற்றிவைத்து பெயர்ப் பலகையையும் திறந்து வைத்தார்- கல்வி வளர்ச்சிக்கழகம் மன்னார் மாவட்ட அரசியற் துறை துணைப் பொறுப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டது- கப்டன் அன்ராஜின் உருவப்படத்திற்கு ஈகைச் சுடரை அவரது தாயார் ஏற்றி வைத்தார்.

## சீன வெளியுறவு அமைச்சர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

சீனாவின் வெளியுறவு அமைச்சரும் துணை பிரதமருமான குயன்கிஷன் இம்மாதம் 28 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார். இவர் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ. சீ. எஸ். ஹமீட், ஜனாதிபதி, பிரதமர், ஆகியோரையும் சந்தித்து பேசுவார்.

மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டு வரும் சீன அமைச்சர் இருதரப்பு விவகாரம், சர்வதேச உறவு ஆகியவை குறித்து சிறிலங்கா தலைவர்களுடன் பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மரநடுகைபோட்டிமுடிவுகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்படும் மரநடுகைப் போட்டித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற போட்டியின் ஓராண்டு நிறைவில் வடமராட்சிக் கோட்ட பாடசாலைகளில் துன்னாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், மாணவர்களுக்கான இப்போட்டியில் முதலாமிடத்தை நெல்லியடி பொன்னம்பல வித்தியாலய மாணவன் மதிக்குமாரும், இரண்டாமிடத்தை நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவன் சிவரஞ்சனும், மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன் ரூபகாந்தனும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரிவில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் தம்பாட்டி அ. த. க. பாடசாலை தெரிவு செய்யப் பட்டிருப்பதுடன், மாணவர்களுக் கிடையிலான போட்டியில் முதலாமிடத்தை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இ. சிவசுதர்ஜனனும் இரண்டாமிடத்தை தம்பாட்டி அ. த. க. பாடசாலையை சேர்ந்த வே. வினோதிகுமாரும், மூன்றாமிடத்தை தம்பாட்டி அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த மா. சிவானந்தனும் பெற்றுள்ளனர்.

## வடமராட்சியில் 'ரசெப்வகுப்புகள்'

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பிரிவில் ஆசிரியர், விகிதர்களுக்கான (TACEP) ஆங்கில வகுப்புகள் பருத்தித்துறைவட இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் பி. ப 2 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளன.

## போதைப் பொருள்களுடன் மூவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஏழுலட்சம் ரூபா பெறுமதியானபோதைவஸ்துக்களை வைத்திருந்த ஒருவரும், மேலும் இருவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் கொழும்பு புறக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் கொலை தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்ய பொலிசார் எடுத்த முயற்சியின் போதே மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டதாக மேலும் கூறப்படுகின்றது.

## தபால் திணைக்களத்திற்கு எழுதுவினைஞர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தபால் திணைக்கள எழுதுவினைஞர் வெற்றிடங்கள்யாவும் மத்திய அரசினால் நடாத்தப்பட்ட பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களால் நிரப்பப்படவுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வெகுவிரைவில், கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட இருப்பதாக வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (பா)

## பணிப்பெண்களாக செல்ல பயிற்சி பெறவேண்டும்

வேலைவாய்ப்பு பணியகம் பணிப்பு


பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து தரும்





5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

31.05.1942

மறைவு

15.02.1989

திதி:



முல்லை
மாவட்ட
கலைஞர்களின்

முத்துக்கள்
இரண்டு


# பாயும்புலி பண்டாரவன்னியன்

(வரலாற்று நாடகம்)

# ஆக்கிரமிப்பாளரின் அவலம்

(இசை நாடகம்)

**இடம்:** மானிப்பாய் மாவீரர் கலையரங்கு
**காலம்:** ***21-02-1994*** மாலை ***7.00*** மணி

**அன்பளிப்பு: 1000/- 500/- 15/- 10/-**

**விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும்**

விளம்பர அன்பளிப்பு:

**வீடியோ விமல்**
ஐந்து சந்தி,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**சுப்பஸோ**
வீடியோ ஓடியோ சென்ரர்
198/5 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8680)


(கொழும்பு)
பயிற்சிபெறாத பணிப் பெண்கள் எதிர்வரும் யூலை மாதம் முதல் வெளிநாடு செல்வது தடைசெய்யப்படும். இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தில் வேலை வாய்ப்பு பயிற்சிபெற்று, சான்றிதழ் பெற்ற பணிப்பெண்கள் மாத்திரமே மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் செனவிரட்ன இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையிலிருந்து பயிற்சி பெறாமல் செல்லும் பணிப் பெண்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வீட்டு நவீன கருவிகளை உபயோகிக்கத் தெரிவதில்லை. அதனால் உடைத்து விடுகின்றனர். இதனால் பிரச்சினைகள் உருவாகிறது. யூலை மாதத்தின் பின்னர் பயிற்சிபெறாத பணிப் பெண்கள் அங்கு செல்வது தடை செய்யப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.


யாழ். பல்கலைக்கழக
வணிக முகாமைத்துவ
மாணவர் மன்ற நிதிக்காக
கலைப்பீட மாணவர் வழங்கும்

## 'பொய்க்கால்'

(நாடகம்)

16-வது தடவையாக மேடையேறுகின்றது

**காலம்:** 23.02.1994 புதன்கிழமை பி.ப.
4-00, மணி6-00 மணி

**இடம்:** வடமராட்சி மத்திய மகளிர்
கல்லூரி (நெல்லியடி)

அன்பளிப்பு ரூபா: 10/-

விளம்பர அன்பளிப்பு:-

## திருமகள் புத்தகசாலை

நெல்லியடி.

(7573)


## அறிவித்தல்

கப்பல் கட்டணத்தை, பொருள்கள் கொள்வனவு செய்வோரே பொறுப்பேற்க வேண்டும் என்று சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் இன்றிலிருந்து மாவின் விலை கிலோ ஒன்றிற்கு ரூபா 4/- வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது

ஆகவே பாணின் விலை நாளை செவ்வாய்க்கிழமை 22-2-94 முதல் 330 கிறாம் பாண் ஒன்று 9/- எனவிலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

விலை, நிறை, தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்

தலைவர்
**யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.**

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-8681)



**திதி:
21.2.1994**

## சின்னையா தம்பித்துரை

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடர் ஒளியாய் வாழ்ந்து எங்களை எல்லாம் இடையில் தவிக்க விட்டு பிரிந்து சென்ற ஆருயிர் தெய்வமே, எம்மைப் பிரிந்து ஐந்தாண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

13, இணையதம்பி வீதி,
அரியாலை.

(7579)

## நினைவு கூருகின்றோம் ..
## 1994. 02. 21

1986 ஆம் ஆண்டு இத்தினத்தில் யாழ் - தட்டா தெருச்சந்தியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுரேன்** (திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - சிவரஞ்சினி வீதி, நாயன்மார்கட்டு - யாழ்)

யாழ் - காங்கேசன்துறை, ஊறணிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு - கித்துள் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**மணி** (பிலிப் அந்தோனி - கல்முனை - அம்பாறை)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். புஷ்பராசா** (தியாகராசா அகிலன் அகிலன்வீதி, நீர்வேலி மத்தி - யாழ்)

1992ஆம் ஆண்டு திருமலை- வேப்பங்குளம் முகாமிலிருந்து 10-ம் கட்டை முகாமிற்கு ரோந்து சென்ற சிறிலங்கா விமானப்படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கருணன்** (இராசதுரை தெய்வேந்திரம் - மூதூர் திருமலை)

**லெப். விக்னேஸ்-பனம்பாரன்** (அருளப்பர் ஜுட்ஸ் ஊர்காவற்துறை மேற்கு யாழ்)

1993ஆம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் சிறிலங்காகடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்கொல்லப்பட்ட 04 பொதுமக்கள்

மட்டு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட மகிழவெட்டுவான்-வந்தாறுமூலையைச்சேர்ந்த தமிழ்மகன்.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8676)

## தமிழர் விதைத்த நெல்லை இராணுவம் அறுவடை

(மட்டக்களப்பு)

பாவற்கொடிச் சேனையில் தமிழர் ஒருவரின் வயலில் அறுவடைக்கு தயாராயிருந்த நெல்லை சிறிலங்கா இராணுவத்தினர் வெட்டி முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 13-ம் திகதி சிவசம்பு ராஜு என்பவரின் 15 ஏக்கர்வேளாண்மையைவெட்டிய சிறிலங்கா இராணுவத்தினர் அவற்றை உழவு இயந்திரம் மூலம் கன்னகிபுரம் முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

உரவகையோபோதியபாதுகாப்போ இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் விளைவித்த நெல்லை இராணுவத்தினர் களவாடிச் சென்றுள்ளமை குறித்து விவசாயி கவலை தெரிவித்துள்ளார்.

## புதிய தேர்தல் முறைக்கு சு. க. கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரு பகுதியினரை மக்களின் தெரிவு இன்றி நியமனம் செய்யும் முறையைக்கொண்டு வர சிறிலங்கா ஜனாதிபதிமுயற்சிசெய்வது, தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கான முயற்சியாகும் என சுதந்திர கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் ஒரு நடவடிக்கை இதுவென்றும் தனது ஆட்சியை நிலைபெறச் செய்வதே ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் குறிக்கோளாக உள்ளது எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு-5 புலமைப்பரிசில் விரைவில் வெட்டுப்புள்ளி

(கொழும்பு)

கடந்த வருடம் ஆண்டு ஐந்திற்கு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி அடுத்தமாதம்முதல் வாரத்தில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ் வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் மார்ச் மாதம் பிள்ளைகள் முன்னணிப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என அவர் மேலும் கூறினார்.

## புத்தளத்தில் கொள்ளை இருவர் பொலிசாரால்கைது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர் சிலர் நகைக்கடையொன்றில் நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துள்ளனர்.

இக்கொள்ளைக்குழுவினரை துரத்திச் சென்ற பொலிசார் அவர்கள் பயணம் செய்த வாகனத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து இருவர் கைது செய்யப்பட்டதாக முந்தல் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் கூறியுள்ளனர்.

ஐ. தே. க அரசாங்கத்திற்கு எதிரான

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன் அறிவித்தல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக எதிரணிக் கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கான முன் அறிவித்தல் கடந்த 11ஆம் திகதி சபாநாயகர் எம். எச். முகமதிடம் கையளிக்கப்பட்டதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் பிரேரணையின் முன் அறிவித்தலை எதிர்க் கட்சி தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காசிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி, சீ. வீ. குணரட்ன, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்தினேஷ் குணவர்த்தன, தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி. ஜோ. நவரட்ணம் ஆகியோர் உட்பட பலர் கைச்சாத்திட்டிருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணாமல் அரசாங்க உயர்மட்ட அரசியல் வாதிகள் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது. அரசு கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான உடைமைகள் ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கு குறைந்த விலையில் விற்கப்பட்டிருக்கின்றன. எயார்லங்காவின் எயார் பஸ் கொள்வனவு மூலமாக அரச ஆதரவாளர்கள் முறைகேடான முறையில் பணம் சம்பாதிக்க வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முன்னைய சந்தர்ப்பங்களில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளைகளில், ஐ.தே. க-இ. தொ. கா என்றே குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தத் தடவை இ.தொ காவை குறிப்பிட வேண்டாம் என தமிழ்க் கட்சிகள் சில தெரிவித்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணக்கம் தெரிவித்ததாக தெரிய வருகிறது.


இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

14-வது இசைவிழா

10-ம் நாள் 21-2-94

திங்கட்கிழமை

சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு

ப. நோ. கூ. ச ஆதரவில்

மாலை

4.00 - 5.00 மங்களஇசை

எஸ். ரமணன் ) நாதஸ்வரம்
ஆர். சிவசாமி )

வீ. பாபு ) தவில்
எஸ். ரஞ்சன் )

5-00 5.10 மிருதங்க இசை

கே. சுரேஸ் கே. நந்தகுமார்
பி. சதீஸ் பி. பாலகுமாரன்

5.10-5.30 பாட்டு

பி. குமரேஷ் )
பி. சசிரேகா ) பாட்டு
பி. சுதர்ஷா )

எஸ். சிவகலா - வயலின்
கே. கஜன் -மிருதங்கம்

5.30 -5.50 வீணை வயலினிசை


## தென்மாகாணத்தில் டி. பி. தீவிர தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

தென் மாகாணத்திலுள்ள சகல தேர்தல் தொகுதிகளுக்கும் செல்லவுள்ள சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அங்கு நடைபெறவுள்ள ஐ. தே. கவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வார் என எம். எஸ். அமரசிறி கூறுகிறார் இவர் மார்ச் 6ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

தென்மாகாண சபையில் ஐ. தே. க தோல்வி அடைவதைத் தவிர்க்கவே இந் நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வலி. தெற்கு பிரதேசத்தின்

## வேலைத் திட்டங்களுக்கு மாகாணசபை அங்கீகாரம்

(மல்லாகம்)

வலிகாமம் தெற்குப் பிரதேசத்துக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டங்களுக்கென 7, 45,000ற்குரியவேலைத் திட்டங்கள் வடகிழக்கு மாகாண திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. வீதிவேலைகளுக்கு 83,000 ரூபாவும், கல்விக்கு 1,10,000 ரூபாவும், பொதுச் சுகாதாரத்துக்கு 70,000ரூபாவும், ஆரம்பசுகாதார நடவடிக்கைக்கு 75 000 ரூபாவும், வடிகால் வேலைக்கு 90 000ரூபாவும், விவசாய அபிவிருத்திக்கு 19.000 ரூபாவும், மரக்கன்றுகள் உற்பத்திக்கு 75 000ரூபாவும், மரநடுகைக்கு43 000ரூபாவும் நீர் விநியோக குழாய்க் கிணறு அமைக்க 1.75000 ரூபாவும், நிலப் பயன்பாட்டு ஆரம்ப நடவடிக்கைகளுக்கு 5,000 ரூபாவும் மொத்தமாக 7,45,000க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசசெயலர் பிரிவுக்கு 10 இலட்சம், என்ற அடிப்படையில் இவ் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது இவ் ஒதுக்கீட்டில், மேற்படி பிரதேச செயலர் பிரிவில், கல்விக்கென அங்கீகாரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேலைத்திட்ட செலவினமான 2,55,000க்கு அங்கீகாரம் வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது. இதனால் வேறு புதிய வேலைத்திட்டங்கள் தற்போது முன்மொழிந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி வழங்கப்பட்ட வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பித்து செயற்படும்படி வலி. தெற்குப் பிரதேச செயலாளர் அவ்வப் பகுதிகளுக்கு பணித்துள்ளார். (09)

## கிணற்றில் வீழ்ந்து இளம்பெண் மரணம்

தண்ணீர் எடுக்கும் போது கிணற்றில் தவறுதலாக விழுந்த இளம் யுவதி ஒருவர் மரணமான சம்பவமொன்று அண்மையில் தென்மராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நுணாவில் மத்திய பகுதியில் வசிக்கும் இரத்தினபாலசிங்கம் தர்சினி என்னும் 21 வயதுடைய இளம் பெண்ணே இச்சம்பவத்தில் பலியானவர் ஆவார். (86)


கோழிக்குஞ்சுகள்

விற்பனைக்கு

# பெண்மீது துப்பாக்கிச்சூடு பெலியத்தயில் சம்பவம்

(கொழும்பு)

பெலியத்த பகுதியில் இனம் தெரியாத ஆயுதபாணிகள் சிலரால் ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்கு செல்லும் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் காலையில் தனது கடமைக்குச் செல்லும் போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இப் பெண்ணின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அவர் ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் தெரியவருகிறது.


# பிறந்த நாள் வாழ்த்து



குரும்பசிட்டி வைத்திய கலாநிதி

**பகீரதன் - கல்பனா தம்பதிகளின்**

**அரும் புதல்வன்**

**பகீரதன் பிரணவன்**

இன்று (21. 02. 1994) கனடாவில் தனது மூன்றாவது பிறந்த நன்னாளை மகிழ்வுடன் கொண்டாடும் வேளையில்:-

மண்ணில் மலர்ந்த மல்லிகையோ
வேறெந்த மாமலரோ - எங்கள்
கண்ணிலும் இனியவன் கனடாவாழ்
குமிழ்நகைச் செல்வன் பிரணவன்!

ஆண்டது மூன்றில் அடிபதிக்கும்
அருமைப் புதல்வன் - எங்கள்
தூண்டா நன்மணித் தீபமாய்த்
துலங்கிடும் செல்வன் பிரணவன்!

இன்று போலென்றும் இனிய நலம்
எல்லாம் எய்திடவே - எங்கள்
குன்றனைய ஆசிகள் அவன்பால்
கவிந்திட மனமார வாழ்த்துகிறோம்!

"அன்னை இல்லம்"
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (7566)

குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.


களில் அரசுக்கு எதிராக நம்

---

## பத்திரிகையாளர் கொலை இருவர் கைது

(கொழும்பு)

மர்மமாக கொலை செய்யப்பட்ட பெண் பத்திரிகையாளரின் கொலை சம்பந்தமாக பம்பலப்பிட்டி பொலிசார் இரு சந்தேக நபர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இறந்த செல்வி லொயரா வின் வீட்டிலிருந்துகொள்ளையடிக்கப்பட்ட பணத்தையும் பொலிசார் அவர்களிடமிருந்து மீட்டனர்.

## நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு- நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கான 1994 ஜனவரி மாத நான்கு வார இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தற்போது சங்க நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன. யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு, வெள்ளைப்பூடு, புளி, சோயாமீற், தீப்பெட்டி ஆகிய பொருட்கள் இவ் விநியோகத்தின்போது வழங்கப்படுகின்றன. (22)

## மீன் வியாபாரம் ஊக்குவிப்பு

வல்வெட்டித்துறை வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் மீன் வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 22 மீனவக் குடும்பங்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கு தலா 5,000 ரூபா வீதம் இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன் வியாபாரத்தை மேற்கொள்ள என மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இவ்வாறான உதவிகள் மூலம் பல மீனவக் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


அ. பிரியதர்ஷினி )
ஜெ. சிவசக்தி )
சி. வித்தியலட்சுமி ) வீணை
க. சறோஜினி )
கி. சுவர்ணலட்சுமி )
ஜெ. சிவச்செல்வி ) வயலின்
ப. ரதிரூபன் -மிருதங்கம்

**5.50 - 6.15 பாட்டு**

கே. சுதர்சனி - பாட்டு
எஸ். சிவகலா - வயலின்
எம். சுஜன் - மிருதங்கம்

**6.15 - 6.45 பாட்டு**

துஷ்யந்தி சிவனேசன் - பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா - வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

**6.45-7.30 பாட்டு**

பிரசாந்தி ராமச்சந்திரன் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7.30-8.00 மங்கள விளக்கேற்றல்**

திரு. மா. செல்வராஜா
(தலைவர், மானிப்பாய் பரிஷ் ப.நோ கூ.ச)
திரு. மா. புலேந்திரன்
(தலைவர்,பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.ச)
திரு. சி. கணேசராசா
(கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி)
திரு. க. தவரூபன்
(ரூபன் எரிபொருள் நிலையம் ,திருநெல்வேலி)
தலைவர்:- திரு. வை. செந்திநாதன்
(தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுச்
(சபை சங்கானை ப.நோ.கூ.ச)
பிரதம விருந்தினர்:- திரு. ரி. வைத்திலிங்கம்
(பிரதேச செயலர்| மேலதிக அரசாங்க அதிபர்)
சிறப்பு விருந்தினர்.- திரு. வே. சிற்சபேசன்
(தலைவர் வர்த்தகசங்கம், யாழ்.)
திரு. த. அன்னலிங்கம்
(செயலாளர் வர்த்தக சங்கம் யாழ்)

**8.00-9.00 வயலினிசை**

சாந்தநாயகி சுப்ரமணியம் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் - கடம்

**9.00-10.00 பரதநாட்டியம்**

"திலக நர்த்தனாலய மாணவிகள்"!
தயாரிப்பு : யசோதரா விவேகானந்தன்

**வாழ்த்துவோர்: அருண் களஞ்சியம்**

திருநெல்வேலி சந்தை, திருநெல்வேலி.

(சி-8677)



HY-LINE BROWN, HY-LINE WHITE

கைலைன் பிறவுண், கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு.

999 வெளிநாட்டு மீன்தூள் உடன் விற்பனைக்குண்டு.மற்றும் 21-2-94 கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம்.

"மல்லிகாபதி"
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

(7568)



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**தற்காலிக தொழிலாளர்**

# வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியுடன் கழிவுப் பொருள்களையும் நிர்மாணப் பொருள்களையும் ஏற்றியிறக்கும் தொழிலாளர்களை நியமனம் செய்வதற்குத் தீர்மானித்துளளது.

கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச்சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 27-02-94-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவிலமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தகைமைகள்:**

அ) கல்வி: ஐந்தாம் வகுப்பில் சித்தி.
ஆ) வயது: 18 தொடக்கம் 40 வயது வரை
இ) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 19-02-1994

(சி-8674)



வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

சகல தொழிலாளர்களுக்கும்,

எதிர்வரும் 16-03-94 புதன் கிழமை அன்று பி.ப 2.00 மணிக்கு நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்திலும், புதிய நிர்வாக சபைத் தெரிவிலும் கலந்து கொண்டு தங்களுக்கான சங்கத்தின் எதிர்கால நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மேற்படி சங்கக் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறும்).

நன்றி

செயலாளர்.

(சி-8670)

## இரு இளைஞர் காயம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் இனந்தெரியாதோர் மறைந்திருந்து நடாத்திய தாக்குதலினால் இரு இளைஞர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

அண்மையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மிருசுவில் வடக்கைச் சேர்ந்த ஏ. ஜேசுதாசன் (24), சாள்ஸ் விஜயகுமார் (28) ஆகிய இருவரும் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

## ஆங்கிலக் கட்டுரை போட்டியில் தமிழ் மாணவனுக்கு பரிசு

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் க. ரமேஷ்குமார் கொழும்பு றோட்டரிக்கழகம சிறிலங்கா போதைப்பொருள் தடுப்புச் சங்கத்துடன் இணைந்து அகில இலங்கை ரீதியாக நடத்திய ஆங்கிலக்கட்டுரைப் போட்டியில் 3ஆவது பரிசு பெற்றுள்ளார்.

''இளைஞர் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல்'' என்ற தலைப்பில் இவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைக்கே மேற்படி பரிசு கிடைத்துள்ளது. இதற்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஜனவரி 30ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

செல்வன் ரமேஷ்குமார் பிறவுண் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட திரு: கதிர்காமராசா மங்கையர்க்கரசி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

## போலி முகவர் கைது

போலி வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் ஒருவரை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் கைது செய்யப்படும் போது இவரிடம் மூன்று கோடி ரூபாவுக்கு மேல் பணமிருந்ததை கண்டுபிடிக்கப்


## கணக்காய்வாளர் தேவை

முன் அனுபவமுள்ள கணக்குப் பதிவாளர் உடன் தேவை ஆங்கில அறிவு அவசியம். வயதெல்லை 40 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**யோகாஷ் பிடவை மாளிகை**

16 B - பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-8672)


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
15-12-1921

மறைவு:
04-03-1993

### அமரர் துரையப்பா சுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை)

திதி: 21-02-94

குடும்பத் தலைவனாயும், வழிகாட்டியாயும் இருந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

''லக்கி வாசா''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7559)

## 29-ம் நாள் சபிண்டீகரண அழைப்பு



### அமரர் பொன்னையா சிவகுரு

(விவசாய மன்னன் 7-ம் வாய்க்கால், கிளிநொச்சி)

மலர்வு:
12 - 04 - 1928

உதிர்வு:
24 - 01 - 1994

ஏக்கம் எமக்கு எப்பதான் தீருமோ!

எந்தையே தந்தையே சிந்தையில் திருநிறை
வந்தனை செய்கிறோம் வாழ்கநின் மகத்துவம்,
உழுதூண் சுவையினை வழுவிலா துணர்ந்துளம்
பழுதிலா திருக்கப் பலரும் மெச்சிட;
எம்மை வளர்த்து இல்லத் திருத்திச்
செம்மையும் சீரும் செய்தனை; ஐயநின்
ஊக்கமும் ஆக்கமும் நோக்கமும் வாழ்கவே!
ஏக்கம் எமக்கு எப்பதான் தீருமோ!

இன்று (21-02-94) நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் 23 - 02 - 94 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரன்.

(7576)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
26-03-1984

மறைவு
21-01-1994

### செல்வராஜா பிரசாந்

எம் அன்புச் செல்வமே!
நீ இல்லை என்றாலும்
உன் நினைவு மாறுமோ?

25, செம்மணி றோட்,
நல்லூர்.
(7577)

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

## 3-ம் ஆண்டுநினைவஞ்சலி



பிறப்பு:
16-11-1974

வீரச்சாவு:
21-02-1991

### 2-ம் லெப். புஸ்பராசா

(தியாகராஜா அகிலன்)

''போர்'' என்று வந்த படைகொன்று
சாகண்டு சந்தோசம் கொண்டு
மாவீரனாய் வீரச்சாவை ஏற்றாயே
ஓ! உன் பெருமை கூறுவதே எம்வேலை
அகிலா! புஸ்பராசா! ஆண் மகனே
உன்னைப் பெற்றதுவே எமக்குப் பெருமை!

அகிலன் வீதி,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

உன் நினைவில் வாழும்,
அன்பு அம்மா, ஆருயிர் அப்பா,
ஆசைத்தம்பி.

(சி-8678)

வாருங்கள்! ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ பாருங்கள்!

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக நிதி அன்பளிப்பு காட்சி

"கண்ணகை வழக்குரை" புகழ்

## செல்லையா-மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்

# காத்தவராயன்

"சிந்து நடை மரபுவழிக் கூத்து"

யாழ்/புனித மரியாள் வித்தியாலய மாணவர்களான பிரபல பாடகர் சாந்தனின் புதல்வர்கள் மோகன்ராஜ், பிரபுராஜ் உட்பட அக்கல்லூரி மாணவர்களின் சிறந்த நடிப்பில் உருவான வெற்றிப்படைப்பு

நிகழ்வு I

**இடம்: யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி மண்டபம்**
**காலம்: 6-3-94 ஞாயிற்றுக்கிழமை**
பி. ப. 3 - 6 மணி
**அன்பளிப்பு: 100/-, 50/-, 25/-**

நிகழ்வு II

**இடம்: யாழ் கனகரத்தினம் ம. ம. வி.**
**காலம்: 12-3-94 சனிக்கிழமை**
இரவு 8 - 11 மணி
**அன்பளிப்பு: 100/-, 50/ , 25/- 15/-**

அனைவரையும் அழைக்கின்றோம்.

கழக முக்கிய நோக்கங்கள்:

- மாணவர்கள் மூலம் பாரம்பரிய கலைகளை மேம்படுத்தல்
- மாணவர்களுக்கு, கலைகளில் வித்துவமுடைய அண்ணாவிமார்களையும், மரபுவழி நாடக, கூத்து இசைப்பாடகர்களையும் தெரிந்து எடுத்து, அவர்களுக்கு குறிப்பிட்ட சம்பளம்வழங்கி இச் சேவையில் ஈடுபடுத்தல்.
- நாட்டார் பாடல்களின் இசைகளை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து நாட்டார் இசைகளைப் பாதுகாத்தல்.
- எழுதா மரபுவழி இலக்கியங்களை நூலுருவில் கொண்டுவருதல்.
- பாரம்பரிய கலைகளில் கூத்து ஆட்டம் இசைநாடக இசை கூத்துப் பாடல்களின் இசை என்பவற்றை முக்கியமாக மாணவர்களிடம் புகுத்துதல்.
- நாட்டுப்புற இசைக்கருவிகளை நவீன யுக்தியுடன் மேடைக்கு கொண்டுவந்து மக்களின் செல்வாக்கைப் பெறுதல்.
- பாரம்பரிய கலைகளில் வித்துவமுடையவர்களுக்கு மாதச்சம்பளம் வழங்கி அவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல்.
- அண்ணாவிமார் பரம்பரைக்கு கௌரவமளித்து மறைந்து வரும் தமிழர்களின் பாரம்பரிய கலைகளுக்கு புத்தூக்கம் அளித்தல்.

மேற்படி கழகத்தில் கலைஞர்களையும், ஆர்வலர்களையும் அங்கத்தவர்களாகச் சேரும்வண்ணம் அழைக்கின்றோம்.

விண்ணப்பப்பத்திரத்தை 10/- ரூபா செலுத்தி 365, கோவில் வீதி, நல்லூரில் தினமும் மாலை 4.30 மணிக்குப் பின் பெற்றுக்கொள்ளலாம்.

கழக காப்பாளர்கள்

- திரு. க. சொக்கலிங்கம் எம். ஏ. (சொக்கன்)
- திரு. சி. மகேந்திரன், விரிவுரையாளர், நுண்கலைப்பிரிவு யாழ் பல்கலைக்கழகம்.
- திரு. சி. தார்சீசியஸ், அதிபர், புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

செ. மெற்றாஸ்மயில்
செயலாளர்
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

அன்பளிப்பு விளம்பரம்:

## மெடிஎயிட்ஸ் மருந்தகம்

644, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-8679)

---

## பிறந்த தின நினைவில் எம் டொச்சன்



**மேஜர் டொச்சன் (தமிழரசன்)**
(கந்தசாமி ஜெய்குமார்)
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

தாயின் மடியில் **1966-02-21**
தாயக மண்ணில் **1992-11-24**

அதிக திறமையுடன்
பலாலிப் பகுதிப் பொறுப்பில்
உலா வந்த எம் டொச்சன்
வளலாய்ப் பகுதியில்
எதிரி மீது பாய்ந்தாய்
அச் சமரிலே
அம் மண்ணையே முத்தமிட்டு
இரத்தச் சுவடுகளைப் பதித்து
மாவீரர் வாரத்திலே
மாவீரன் ஆனாய்
இன்று உன் பிறந்ததினம்
நீ எங்களுடன் இல்லை
நீயும் உன் மோட்டார் சைக்கிளும்
ஒவ்வொரு கணப் பொழுதும்
எம் முன் தோன்றுகிறது
நீ வரமாட்டாயா என்று ஏங்குகின்றோம்.
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
மனதுள் நிறைந்த
எம் டொச்சனை
நாம் மறப்போமா?

உன் ஆத்ம சாந்தி வேண்டிநிற்கும்
பொ. இராசையா
குடும்பத்தினர்,
குப்பிளான்,
ஏழாலை.

(7575)

சிந்தனைக்கு

சாகத்துணியும் தோற்றம் கொடுத்தபடியும் வாழத் துடிக்கும் வலுவான ஆவலே தைரியம் என்பதாகும்.

ஜி.கே. செஸ்ட்டர்ட்டன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# தேர்தல் பிரச்சினைக்கு தீர்வாகப் போவதில்லை

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல், ஜனநாயக மரபுகளுக்கு அப்பாற்பட்டதாகவே அமையும் என்பது பற்றி ஏற்கனவே பலதடவை இப்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. அதனை தற்பொழுது தமிழர் தரப்பற்ற எதிர்தரப்பினரே ஒலிக்கத் தொடங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் முகவர் நிலையங்களாகச் செயற்படுவதாகவும், முஸ்லிம் மக்கள் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் அச்சுறுத்தப்படுவதாகவும் ஐ. தே. கவிற்கு வாக்களிக்குமாறு மிரட்டப்படுவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்தலைவர் அஷ்ரப் பகிரங்கமாககுற்றஞ்சாட்டியுள்ளார்

இதேபோன்று சிறிலங்காவில் பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியும் ஆயுதப்படையினராலும் அரச அதிகாரிகளினாலும் தமது ஆதரவு சிங்கள மக்கள் அச்சுறுத்தப்படுவதாகவும், ஐ. தே. கவிற்கு வாக்களிக்குமாறு கட்டாயப்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, பல ஆயிரக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் கிழக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ளதோடு, தீவிர கண்காணிப்பு, ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு, புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது, கிழக்கு மாகாணம் விடுதலைப்புலிகளிடம் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது எனக் கூறும் சிறிலங்கா அரசாங்கம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை திருமலை நகருக்கு அண்மையில் கடந்த

# சகல இனத்தையும் பிரதிபலிப்பவர்களே சமாதான பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்

## மெதகொட சுமணதிஸ்ஸ தேரோ

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எவராவது வடபகுதி நோக்கிச் செல்வதாக இருப்பின் அவர்கள் சகல இனத்தவர்களையும் மையமாகக்கொண்டவர்களாகவே இருக்க வேண்டும்; இவ்வாறு கலாநிதி மெதகொடசுமண திஸ்ஸ தேரோ கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வாறு இல்லாமல், ஏனையோர் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் என்றும் பிரச்சினை மேலும் விரிவடைந்து ஆன்று செல்லும் சாத்தியக்கூறுகளே உள்ளன என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இப்பிரச்சினையின் தீர்வுக்கு உதவக்கூடியோர் இங்குள்ள சகல இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர்களாகஇல்லாதவிடத்து இவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது தற்போது வடக்குநோக்கிச் செல்லும் குழுக்கள் மீது பொது மக்கள் சந்தேகக் கண்களுடனேயே நோக்குகின்றனர். சிலசமயம் அவர்கள் மீது ஆத்திரம் கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எனவே உருவாகியுள்ள ஒரு பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டு இன்னும் பலபிரச்சினைகள் உருவாகுவதற்கு இடமளித்து விடக் கூடாது என்பதே எனது விருப்பம் எனவும் தெரிவித்தார்.

எனவே நான் சமாதானபேச்சுக்களில் பெரும்பான்மைமக்களின் பிரதிநிதிகள் தூதுக்குழுக்களில் கலந்து கொள்வதே உசிதமானது நன்மை பயக்கக்கூடியது என அவர்மேலும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோர் இங்குள்ள மக்களின் நிலை தொடர்பாக மிகவும்தெளிவாக தெரிந்து இருக்கவேண்டும். எனவேஇவ்வாறான சிறு அமைப்புக்கள் இதில் கலந்து கொள்ளாது தவிர்த்துக்கொள்வதே காலச் சிறந்தது என்றும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சு என்பது சர்வதேச சதித்திட்டம்

## தரமிடி பொலரத்னசார தேரோ கருத்து

(கொழும்பு)

சமாதான பேச்சுக்கள் நடத்துவதற்கு எந்தவொரு காரணமும் இல்லை. தீர்வுக்கு ஒரேயொருவழிதான் உள்ளது அது யுத்தத்தினால்த்தான் ஏற்பட வேண்டியிருக்கிறது இவ்வாறு கலாநிதி தரமிடிபொலரத்ன சார தேரோ தெரிவித்துள்ளார்

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக வெளியிட்ட கணிப்பீடு ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் இப்பிரச்சினைக்கான தீர்வுகுறித்துபேச்சுவார்த்தை வேண்டும் என்பது சர்வதேச சதித்திட்டமே என்பதை சகல சிங்கள மக்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும் எனவே புலிகளின் சதிக்கோ அன்றி தொண்டமானின் சதிக்கோ நாம் பலியாகிவிடக்கூடாது என்றும் 'பயங்கரவாதிகளை' முற்றாக ஒழிக்க வேண்டும் என்றும் தெரிவித்ததோடு சென்ற வருடங்களில் ஜே.வி.பி. யினரை அழிக்க பலலாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை அழிக்க முடியுமானால் ஏன் அவ்வாறு செய்து விடுதலைப் புலிகளை அழிக்க முடியாது எனவும் கேள்வி எழுப்பினர்

# முஸ்லிம் வாலிபர்களால் புத்தளத்தில் புதுதண்டனை

(கொழும்பு)

புத்தளம் புளித் தங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த பிறமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு யுவதிகளுக்கும், இரண்டுவாலிபர்களுக்கும் அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வாலிபர்களால் புதுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நள்ளிரவு வேளை இந்த வீட்டிற்கு வந்த வாலிபர்கள் இவர்களை அழைத்துச் சென்றனர் பின்னர் இவர்கள் நால்வரும் ஒருவரால்மொட்டையடிக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட மூன்று முஸ்லிம் இளைஞர்களும் தற்போது பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# தாக்கி அழிக்கப்பட்டவை புலிகளின் படகுகளாம்

(கொழும்பு)

வடபகுதி கடலில் கடற்படை விடுதலைப்புலிகளின் ஏழு படகுகளை தாக்கி அழித்துள்ளதாக சிறிலங்கா கடற்படை அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் வடபகுதி கடலில் பல மீன்பிடிப்படகுகள் மீது கடற்படை நடத்திய தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் பலியானதும், அவர்களது படகுகள் நாசமாகியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

நல்லூர், சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் சிரேட்ட போதனாசிரியர் பதவிக்கான வெற்றிடங்கள் இருப்பதாக வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார். பட்டப் பின்படிப்பு

# சர்வதேச மகளிர் தினம் மாநகரசபை அனுசரிக்கும்

யாழ்ப்பாண மாநகரசபை எதிர்வரும் எட்டாம் திகதியன்று சர்வதேசமகளிர் தினத்தை அனுசரிக்க தீர்மானித்துள்ளது. இதனை முன்னிட்டு ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியத்தின் ஆதரவுடன் கடந்த பத்து வருடங்களாக நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சேவைகளில்சமூக ஈடுபாட்டைகூட்டும் முகமாக வட்டார மகளிர் குழுக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக் கூட்டம் மார்ச் எட்டாம் திகதி அன்று காலையில் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தாய்க் குலத்தினரின் தற்போதைய நிலை தொடர்பாகவும், எதிர்கால முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் கருத்தரங்கு நடைபெற இருப்பதுடன் மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

# ஆயுர்வேத மருந்தாளருக்கு யாழ் இல் பயிற்சி

(வேலணை)

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ளூராட்சி திணைக்கள நிர்வாகத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகின்ற சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்ற மருந்தாளர் (மருந்து கலவையாளர்) களுக்கானபயிற்சி நெறியொன்று அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

இப்பயிற்சி நெறியினை வடக்கு, கிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சு பொறுப்பேற்று நடாத்துவதற்கு முன் வந்திருப்பதாகவும் இதற்காக கிடக்கின்றது சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்தாளர்களுக்கான பயிற்சிநெறிகளை நடத்தி இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு சித்த ஆயுர்வேத மருந்தாளர் சங்கம் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரையும் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் உயர் அதிகாரிகளையும் கேட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

பாலர் கல்வி நிலையம்

கைகளை திருமலை நகருக்கு அண்மையில் கடந்த வாரம் எடுத்திருந்தது. இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பி. பி. ஸி. செய்தியாளர், புலிகள் எவ்வளவு அருகில் உள்ளனர் என்பதைக் காட்டுவதாகவே இவ் இராணுவ நடவடிக்கை உள்ளது'' எனத் தெரிவித்தார்.

அவ்வாறு இருந்தும் டி. பி. விஜேதுங்கா தேர்தலை நடத்தியே தீருவதென்ற முடிவுடனேயே உள்ளார். இது அவரது எதிர்கால அரசியலின் அடித்தளம் இத் தேர்தல் நடந்து முடிந்தால், தனக்கு முன்னுள்ள பிரச்சினைகள் பல தீர்ந்துவிடும் என அவர் கருதுகின்றது போல் உள்ளது; 'எல்லாளனைத் தோற்கடித்த நவீன துட்டகைமுனு' என்ற பட்டம் கிடைக்கும் என்பதும் டி.பி. விஜேதுங்காவின் அபிலாசையாக இருக்கலாம். இதன் மூலம் தென்னிலங்கை அரசியலில் பெரும் லாபம் அடைய முடியும் என்பதோடு, தமிழர் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்தலாம் என்பதும் அவரது குறிக்கோளாகக் கொள்ளலாம்.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவோ அன்றி அவரது ஆலோசகர்கள், இராணுவத் தளபதிகளோ எண்ணுவது போலவும் | செயற்படுவது போலவும், இனப் பிரச்சினையை இலகுவாகத் தீர்த்து வைத்து விடமுடியாது. அது ஒரு இனத்தின் மொழி, கலை, பண்பாடு என்பனவற்றுடனும் அவர்களின் மண்ணுடனும் நேரடியாகத் தொடர்புபட்டதாகும்.

கடந்த காலத்திலும் இதை உணராமலே சிறிலங்கா இராணுவத்தையும், இந்திய இராணுவத்தையும் அரசியல்வாதிகள் பயன்படுத்த முனைந்து தோற்றுப் போனார்கள். சுமார் ஒன்றேகால் லட்சம் இந்தியத் துருப்புக்கள் இலங்கையில் - வடக்கு கிழக்கில் - நிலைகொண்டிருந்த போதும், அவர்களால் மூன்று தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்ட போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை.

இந்நிலையில் கிழக்குமாகாணத்தில் ஆயுதமுனையில் ஒரு தேர்தலை நடத்தி முடித்துவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு விட்டதாக எவராவது எண்ணுவார்களேயானால் அது அவர்களின் தவறான கணிப்பீடு என்றே கூற வேண்டும். தேர்தல்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவையாக இருந்தால், கடந்த காலத்தில், குறிப்பாக 1977ஆம் ஆண்டுத் தேர்தல் உட்பட இந்திய இராணுவம் நடத்திய தேர்தல்கள் வரை நடந்த தேர்தல்களால் தமிழர் பிரச்சினையே முற்றாகத் தீர்ந்து போயிருக்கவேண்டும். ஆனால் தேர்தல்கள் பிரச்சினையைத்தீர்க்க வில்லை. ஆனால் உலகில் இங்கு மட்டுமல்ல தேசிய இனப்பிரச்சினை போன்ற பிரச்சினைகள் உள்ள எந்தப் பிரதேசத்திலும் பிரச்சினையை தேர்தல் தீர்த்து வைக்கவில்லை. அவற்றால் தீர்த்து வைக்கவும் முடியாது இதனை டி. பி. விஜேதுங்கா தற்பொழுது புரியாது போனாலும் பின்னராவது புரிந்து கொண்டே ஆக வேண்டி வரும்.

# வடமராட்சியில் கிராமிய எழுச்சிப் பாசறை

(வடமராட்சி)

வடமராட்சியில் கிராமிய மேம்பாட்டையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் நோக்கிலான கிராமிய எழுச்சிப் பாசறை நடைபெற்று வருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இந்த எழுச்சிப்பாசறை வடமராட்சியில் உள்ள கரவெட்டி மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய கிராமங்கள் உட்பட மத்தொனி ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கிராமியப் பாசறையின் மூலம் மேற்படி கிராமத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த அடிப்படைப் பிரச்சினைகளையும், இக் கிராமங்களின் மேம்பாட்டுக்குத் தடையாக உள்ள காரணிகளையும் ஆய்வின் மூலம் இனம் காணப்பட்டுவருகிறது. அத்துடன் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான சாத்தியமான நடவடிக்கைகளையும் அடையாளம் காணப்பட்டு வருகிறது. சில பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# வன்முறை மூலம் வெற்றி பெற முஸ்லிம் காங். முயற்சி

## அமைச்சர் மன்சூர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம காங்கிரஸ் வன்முறையைத் தூண்டி அதன் மூலம் வாக்குகளைப்பெற முற்படுவதாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் தெரிவித்துள்ளார்.

ஏஜென்சி செய்தி நிறுவனமொன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் கிழக்கு மாகாணத்திற்கு வழங்கும் உதவிகளை நான் முன்னின்று பெற்று கொடுப்பதில் தவறு என்ன? இது விடயமாக அஷ்ரப் ஏன் பதற்றம் அடைய வேண்டும் என்றார்.

கிழக்கு மாகாணத்தில வன்முறையை ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல் இலாபம் பெற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முற்படுகின்றார். எனவே அஷ்ரப்பின் வன்முறைத் திட்டம் கிழக்கு தேர்தலின போது நடக்காது என மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் 3000 இலங்கையர் வருடாந்தம் கைது

(கொழும்பு)

கனடா, ஜேர்மனி, நெதர்லாந்து நாடுகளுக்குள் சட்ட விரோதமாகப்புக முயற்சி செய்யும் மூவாயிரம் இலங்கையர்கள், வருடாந்தம் இந்த நாடுகளில் உள்ள விமான நிலையங்களில் கைது செய்யப்படுகின்றனர்.

பயண அதிகாரிகளைக் கொண்ட சர்வதேச தூதுக் கோஷ்டி ஒன்று கொழும்பில் இதனைத் தெரிவித்தது.

போலி ஆவணங்களுடன் சட்ட விரோதமாக வேலை பெறுவதற்கு போகும் இவர்கள், சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கும் பயணம் செய்யும் பயணிகளுக்கும் பிரச்சினையாகத் திகழ்கின்றனர்.

அவர்களின் இந் நடவடிக்கையை நிறுத்துவதற்கு சகல நாடுகளும்ஒத்துழைக்க வேண்டும் என்று கனடா குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் நாயகம், தெரிவித்துள்ளார்.

துள்ளார். பட்டப் பின்படிப்பு டிப்ளோமாச் சான்றிதழ் பெற்ற அனுபவம்மிக்க ஆசிரியர்களிடமிருந்து இப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் யாவும் ஆசிரியர்கள் பணிபுரியும் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்பாக கையளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அறவழிப் பயிலக திறப்பு விழா

(தென்மராட்சி)

அறவழி பயிலகத்தின் திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று காலையில் நடைபெறவுள்ளது- இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் செ- பத்மநாதனும், முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி பிரிவுச் செயலர் பு சுந்தரம்பிள்ளை, தமிழீழ விடுதலைப்புலிகளை சோந்த சிவநாதி. சிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட இணைப்பாளர் ஜோண் குட்கான்ட் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்-

(86)

# பதில் செயலர் பதவியைநீக்க சிறிசேனகுரே யோசனை?

## ஐ தே.க. வினுள் முரண்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் பொதுச்செயலாளர்சிறிசேனகுரே விற்கும், பதில் பொதுச் செயலாளர் அநுரத்வத்தைக்கும் இடையே கருத்து வேற்றுமை கட்சிக் காரியாலயமான சிறிகோத்தாவில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இதனால் கட்சியேலைகளிலும் பலத்த பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பதில் பொதுச் செயலாளர் பதவியை ரத்துச் செய்ய கட்சியின்பொதுச்செயலாளர்சிறிசேன குரே ஆலோசிப்பதாகவும், அவ்வாறு செய்யப்பட்டால் கட்சியின் முக்கிய ஆவணங்களையும், கடிதங்களையும் அழித்துவிடப் போவதாக பதில் செயலாளர் கூறியதாகவும் தெரியவருகிறது.

பெற்று நடாத்துவதற்கு முன் வந்திருப்பதாகவும் இதற்காக இவ் அமைச்சில் இருந்து உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் அங்கிருந்து செய்திகள் மூலம் அறியக்

# உருவப்படம் திரை நீக்கம்

(பருத்தித்துறை)

புலோலி பொது மக்கள் இலவச நூல் நிலையத்தினதும் இந்துமாமன்றத்தினதும் ஸ்தாபகர் அமரர் புலோலியூர் அரசவாசல் முதலியர் சுப்பிரமணியத்தின் திருவுருவப் படத் திரைநீக்கவிழா புலோலி பொது மக்கள் இலவச நூல் நிலைய மண்டபத்தில் திரு. வி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது

இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. பொ. மாணிக்கவாசகர் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார் சட்டத்தரணி இ உருத்திரா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இளைப்பாறிய அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

(25)

# பாலர் கல்வி நிலையம் ஆரம்பம

(பருத்தித்துறை)

புலோலி தென் மேற்கு வாணர் குடியிருப்பு இளைஞர் சனசமூக நிலைய மகளிர் பிரிவு பாலர் கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது இப் பாலர் கல்வி நிலையத்தை மாதர் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி பாலகிருஸ்ணன் சம்பிரதாய பூர்வமாகத திறந்து வைத்து உரையாற்றினார். இப்பாலர் கல்வி நிலையத்திற்கு "சாந்தி நிகேதன்" எனப் பெயர் சூட்டப்பட்டது இப் பாலர் கல்வி நிலையத்திற்கான தகுதியான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(25)

# ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது

(மல்லாகம்)

வலி தெற்குப் பிரதேச செயலர் பிரிவில், போசாக்கு, குடும்ப சுகாதாரம், சமூக சுகாதாரம் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வலி. தெற்குப் பிரதேச செயலரை தலைவராக கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில், சுகாதார வைத்திய அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், தொண்டர் ஸ்தாபனங்கள், விவசாய உத்தியோகத்தர் போன்றவர்களைக் கொண்ட 21 பேர் கொண்ட இவ் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்குழுவின் கூட்டத்தில், மேற்படி பிரதேச செயலர் பிரிவில், போசாக்கு, குடும்பம் சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளல், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள் நடத்தல், குறிப்பாக பாடசாலைச் சிறுவர்கட்கு போசாக்கு பற்றிய அறிவைப் புகட்ட நடவடிக்கை எடுத்தல், போசாக்கு குன்றிய மக்கள் வாழும் கிராமங்களை அடையாளங் கண்டு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது பற்றியும் ஆராயப்பட்டது.

(9)

# அணு ஆயுதப்போரின் விளிம்பிற்கு தென் ஆசியா இருமுறை சென்றது

## கிரிட்டிக்கல் மாஸ்' புத்தகம் தரும் அதிர்ச்சித் தகவல்,

இந்தியாவும், பாகிஸ்தானும் இருமுறை அணு ஆயுதப்போரின் விளிம்பிற்குச் சென்றதைப்பற்றிய தகவல்களை 'கிரிட்டிக்கல்மாஸ்' என்ற புத்தகம் வெளியிட்டுள்ளது. உலகத்தின் மிக ஏழ்மையான இவ்விரு நாடுகளும்மிக ஆபத்தானவை என்கிறார்கள் புத்தகத்தின்ஆசிரியர்கள்.

1984 அக்டோபர் 21ஆம் திகதி இந்தியா பாகிஸ்தானின் அணு ஆயுத இருப்பிடமான கஹூடாவின் மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்போவதாக முடிவெடுத்தது. இத் திட்டத்தை அமெரிக்காவின் உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏயும் அறிந்திருந்தது. காஷ்மீரில் பதற்றம் அதிகரித்ததால் இந்தியா மீது அணு ஆயுதப்போர் தொடுப்போம் என்று 1990-ல் பாகிஸ்தானும் எச்சரித்தது.

1984 ஒக்டோபர் 31 ஆம் திகதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டதற்கும், அதே ஆண்டு ஒக்டோபர் 21 இல் இந்தியா பாகிஸ்தான் மீது அணு ஆயுதப்போர் நடவடிக்கையில் இறங்க முடிவு எடுத்ததற்கும் தொடர்புண்டு என்று 'கிரிட்டிக்கல் மாஸ்' (Critical Mass) என்ற அந்தப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குலாம் இஷாக்கான் தான் ராஜினாமாச் செய்தபோது செய்தியாளர்களிடம் 1984-ல் இந்தியா பாகிஸ்தானைத் தாக்க தீர்மானித்தபோது தான்தான் பாகிஸ்தானைக் காப்பாற்றியதாகப் பெருமையடித்துக்கொண்டார். இந்திராகாந்தியின் மரணமே அந்தத் தாக்குதலைத் தவிர்த்தது என்றார். இச் சம்பவங்களைப் பார்த்தால் இந்திராகாந்தி கொலைச் சதிக்குப் புதிய பரிமாணம் ஏற்படுகிறது என்று புத்தகத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது:

இப் புத்தகத்தின் ஆசிரியர்களில் ஒருவர் வாஷிங்டன் போஸ்ட், வால்ட்ஸ்ரீட் ஜேர்னல் ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் செய்தியாளரும், தற்போது நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியருமாவார். மற்றவர் அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமான என். பி. சியின் நிகழ்ச்சி தயாரிப்பாளர் ராபர்ட் விண்ட்ரெம் என்பது குறிப்பிடத்தக்கது.

சாகல் என்ற இடத்தில் மூன்றே நிமிடத்தில் பாகிஸ்தான் அணுகுண்டைப் பூட்ட முடியும் என்பது சி. ஐ. ஏ. விற்குத் தெரியும். அணு ஆயுதப் போரின் விளிம்புக்குச் செல்லும் இந்த ஆபத்தை அசட்டை செய்வது தற்கொலைக்கு ஒப்பானதாகும் என்று அந்தப் புத்தகத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# தவறான ஓய்வூதியம் கொடுப்பனவால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதியர் ஒருவருக்கு மேலதிக ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்கியுள்ளது.

ஓய்வூதியம் வழங்கப்படும் நடைமுறையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக வழங்கப்பட்ட இம் மேலதிகக் கொடுப்பனவு சில மாதங்கள் கழித்து குறிப்பிட்ட ஓய்வூதியரிடமிருந்து மீண்டும் மீளப் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு 54437 ரூபா மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டதற்கும் மீளப் பெறப்பட்டதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ். செயலக ஓய்வூதியத் திணைக்கள அலுவலகத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.

மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டமையைக்கண்டு பிடிப்பதற்காக இவ் அலுவலகத்தின்பலஆவணக்கோவைகள் பல முறை புரட்டப்பட்டன. அத்துடன் கடந்தகால நடவடிக்கைகள்பலவும் ஞாபகமூட்டப்பட்டன. இத்தனை முயற்சிக்கும் பின்னர்தான் இவ்விடயம் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி தவறு ஏற்பட்டமைக்கு யாழ். கல்வித்திணைக்களத்தின் ஓய்வூதியக் கிளை கணிசமான பங்காற்றியிருக்கிறது என்பதும் இப்பொழுது தெரியவந்திருக்கிறது. (க) நி'

### வீரச்சாவு

வீரச்சாவடைந்த கப்டன் அறிவழகன் / அறிவு (யோகராசா றொபின்சன் - மயிலிட்டி தற்போதைய முகவரி; அகதிமுகாம் குடத்தனை வடமராட்சி கிழக்கு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்"

### போராட்ட

எவ்வித தடைகளையும் எதிர் நோக்க தயாராக இருந்தனர்.

தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வி வழங்க வேண்டும் என்ற அக்கறைத் தன்மையை இன்று சிங்களவர் நாடு முழுவதும் ஏற்பட்டு தமது பிள்ளைகள் கல்வியைப் பெறவேண்டும் என்று உணர்ந்து செயற்படு

### கப்பல்

அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூசைப்பிள்ளை சிறில் அவர்களால் ஒப்பமிட்டு வெளியிடப்பட்ட

நீண்டகாலமாக யாழ். மாவட்ட மக்களின் உணவு விநியோகம், தேவை பற்றி அரசுக்கும், அரச அதிபருக்கும் அழுத்தத்தை கொடுத்து வந்துள்ளது. யாழ். மாவட்ட

### கட்டாக்காலி நாய் ஒழிப்பு வேட்டை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் நாய் வேட்டை நடைபெற்று வருகிறது. யாழ்மாநகரசபையின் தொழிலாளர்கள் நகரப்பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களை வேட்டையாடி வருகின்றனர். இந்த நடவடிக்கையின் போது கட்டாக்காலியாக அலைந்து திரிந்த நூற்றுக்கு மேற்பட்ட நாய்கள் சுற்றிவளைத்து வேட்டையாடப்பட்டதாக இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

### அவ்ரோ சாகசம்

(குருநகர்)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த அவ்ரோ விமானம் ஒன்று நேற்று காலை 9 15 மணியளவில் யாழ். நகரின் கிழக்குப் பகுதியில் வட்டமிட்டும், குத்திப் பதிந்தும் சாகசம் காட்டிச் சென்றது.

அதனை அடுத்து உலங்குவானூர்தி ஒன்று யாழ். நகரின் கிழக்குப் பகுதியில் பறந்து சென்றது. (21)

# இரட்டைவேடஅரசியல்மூலம் பதவியைகாப்பாற்ற முயற்சி

(கொழும்பு)

தீவிர போக்குடைய சிங்களவர்களின் வாக்குகளைப் பெற்றாலேயே தேர்தலில் வெற்றி பெறலாம் என்பதுடன், சமாதானப் பேச்சு நடத்தினாலேயே வெளிநாட்டு உதவி பெறலாம் என்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் டி. பி விஜேதுங்காவும் உள்ளனர்.

இந்நிலையில் யுத்தப் பிரகடனத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் சமாதானப் பிரகடனத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்துவருகின்றனர், இவ் இரட்டை வேடப் போக்கினால் தமது பதவிகளைக் காத்துக்கொள்ள முயல்கின்றனர் என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

சிங்கள தீவிரவாதிகளை திருப்தி செய்வதற்காக யுத்தப் பிரகடனமும் வெளிநாடுகளை திருப்திப்படுத்த சமாதான பேச்சுகளில் ஈடுபடுவது போன்ற தோற்றத்தையும் இவர்கள் ஏற்படுத்த முயல்கின்றனர்,

இதேவேளை டி பி. விஜேதுங்காவிற்கும். பிரதமர் ரணிலுக்கும் இடையே தொடர்ந்து கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. காமினி திசநாயக்காவின் மைத்துனர் விக்கிரமவீரசூரியவை தனது ஆலோசகராக நியமிக்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காஎடுத்த முயற்சி பிரேமதாச ஆதரவாளர்களால் முறியடிக்கப்பட்டது, அதனை மீண்டும் செய்வதற்கு டி. பி விஜேதுங்கா திட்டமிட்டுள்ளார்என அவர் மேலும் தெரிவித்தார்,

ஐ தே. க. அரசாங்கத்தின்

# கொலை நடவடிக்கைக்கு காரணமானவர் விடுதலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கொலை நடவடிக்கைகளுக்கு காரணமாக இருந்த இருவர் நீதி மன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட இருந்த நிலையில் ஒரு நாள்கூட சிறைத் தண்டனை அனுபவிக்கவிடாது ஜனாதிபதி தனது விஷேட அதிகாரங்களை

குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இச் செய்கையினால் சிறிலங்காவின் சட்டத்துறையும் நீதித்துறை போன்ற நிறுவனங்களும் மிகவும் சோர்வு அடைந்துள்ளன. அரசியல் அமைப்பிலுள்ள கருத்துகளை துஷ்பிரயோகம் செய்வதை போல் அமைந்தது இவரின் செய்கை

# வடபகுதி கடலிலேயே இந்தியமீனவர்சுடப்பட்டனர்

## சிறிலங்கா அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதிக் கடலில் தடைவிதிக்கப்பட்ட கடற்பிரதேசத்திற்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோதே கடந்த சனியன்று இரு தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய - சிறிலங்கா அரசுகளிடையே பல ராஜீய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் கடந்த 5 மாதங்களில் சுமார் 10 இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கடல் தடை வலயம் இருப்பினும் கச்சதீவு அருகே மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை அளிக்கும் பழைய உடன்படிக்கையும் இப்பகுதி மீன்வளம் அதிகமாக இருப்பதும் இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையின் தாக்குதலுக்கு இலக்காக வழி வகுப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் வடபகுதி கடலில் சிறிலங்கா கடற்படைக் கப்பலை தற்கொலை தாக்குதல் மூலம் தகர்த்ததையடுத்து கடந்த செப்டம்பரில் இக்கடல் தடைச்சட்டம் அமுலுக்கு வந்ததாகவும் இத் தடைச்சட்டம் மீனவர்களின் உயிரை பறிப்பதாக இருப்பதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. சிறிலங்கா அரசு தனது பலம் வாய்ந்த அண்டை நாட்டுடன் தீவிரப்பட்டுவரும் இந்த முறுகலை தீர்க்க விரைவில் செயற்பட வேண்டியுள்ளது எனவும் பி. பி. ஸி. சுட்டிக்காட்டியது.

கிறிஸ்தவ மதகுருமாரின்

# வடபகுதி விஜயம் குறித்து சிங்கள அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கிறிஸ்தவ மதகுருமார் வடபகுதிக்குச்சென்று சமாதான பேச்சுக்களை நடத்தி வருவதற்கு சிங்கள பௌத்த மக்கள் தமது முழுமையான எதிர்ப்பைக் காட்டவேண்டும் என சிங்கள மகா சம்மேளன பூமி புத்திர கட்சியின் தலைவர் அரிச்சந்திர விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இந்தப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதன் பின்னணி தொடர்பாக சிங்கள மக்களுக்கு ஒரு தெளிவான விளக்கத்தை இன்றைய கட்சிகள் செய்யத் தவறிவிட்டன என்றும் எனவே தனது அமைப்பு சிங்கள மக்களுக்கு இது தொடர்பான மிக தெளிவாக கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்த நிலையிலும ஒரு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படமாட்டாது என்றும், இன்று சமாதானம் போல் தோன்றினால் நாளை இதைவிட ஆபத்துக்களை சிங்கள பௌத்த மக்கள் சந்திக்க வேண்டி வரும் என இவர் மேலும் தெரிவித்தார் இன்று வடக்குகிழக்கில் மட்டுமே சிங்கள பௌத்தத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது நாளை முழு நாட்டிலுள்ள சிங்கள பௌத்தத்திற்கும் ஆபத்து ஏற்பட்டு விடும் எனவே சிங்கள பௌத்த மக்கள் இது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

### ஆய்வரங்கு

(குருநகர்)

யாழ் திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு (வானொலி நாடகம்) ஆய்வரங்கு நடைபெறும்.

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை மேற்படி ஆய்வரங்கில் உரையாற்றுவார் (21)

கண்டன அறிக்கையின் முழு விபரமும் வருமாறு;

சிறிலங்கா அரசு பல வருடங்களாகச் சர்வதேச சமுதாயத்தை ஏமாற்றி பாரிய யுத்தமொன்றை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந் நீண்ட கால அர்த்தமற்ற போரினால் எம் மக்களின் பெறுமதி மிக்க சொத்துக்கள், மூலவளங்கள், பொருளாதார அபிவிருத்திகள் போன்ற இன்னும் பல வளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன; இதனால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டு பல வழிகளாலும் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளார்கள், என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கியவுடன் பொருளாதாரத்தடை போடப்பட்டதனால் அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு, கட்டுக்கடங்காத விலையேற்றம் என்பவற்றால் எமது மக்கள் நிலைகுலைந்து தடுமாறினர். அத்துடன் கடல் வலய தடைச்சட்டம், போக்குவரத்து பாதை துண்டிப்பு, கைத்தொழில்களுக்கான மூலப்பொருள் இன்மை, தொழிற்சாலைகளின் மீது குண்டுவீச்சு ஆகியவற்றால் தொழில் வேலை வாய்ப்பை முற்றாக இழந்தனர். இதனால் எமது மக்கள் சந்தித்த சோதனைகளும், வேதனைகளும், அவல வாழ்க்கையும் எண்ணிலடங்காதவை: குறிப்பாக வறுமை என்னும் கோரப்பிடிக்குள் சிக்குண்டு பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தநேரத்தில்தான்யாழ். மாவட்ட மக்களின் நெஞ்சை கசக்கிப் பிழிகின்ற அதிர்ச்சியான தகவல் வெளியாகியது. இச்செய்தியின்படி ''எதிர்காலத்தில் யாழ். மாவட்ட மக்கள் கப்பலில் வரும் உணவுப் பொருள்களுக்கு கப்பல் கூலி செலுத்தி கூடுதல்விலை கொடுத்தே பொருள்கள் பெறவேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மக்களுக்குத் தேவையான உணவை அனுப்பி ஏனைய சிங்கள மாவட்டங்களில் என்ன விலைக்கு பொருள் விநியோகம் செய்யப்படுகின்றதோ அந்த விலைக்கே இங்கும் பொருள் விநியோகிக்கப்பட வேண்டும். இதுதான் அரசின் தார்மீக கடமையாகும். இதை விடுத்து தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கி பட்டினி என்னும் கோரப் பிடிக்குள் சிக்க வைத்து அறிவியல் ரீதியாகச் சிந்திக்க விடாமல் தடுக்க முனைகின்றது. இலங்கையின் ஒரு பகுதிதான் வடக்கு - கிழக்கு என்று ஏற்றுக்கொண்டால் பொருளாதாரத்தடை, போக்குவரத்து தடைகளை நீக்கி விட்டு தென்னிலங்கை மக்கள் பெறும் விலைக்கே பொருள்கள் பெற நடவடிக்கை எடுக்கட்டும். இதைச் செய்ய இயலாது போனால் எமது மண்ணிலிருந்து தமது பரிவாரங்களுடன் வெளியேறி விடுவதையே தமிழ் மக்கள் பெரும் ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள்.

ஏற்கனவே பொருளாதாரத் தடை என்ற கோரப்பிடியில் இருந்து தம்மை மீட்டெடுக்க முடியாத மக்கள் அரசின் எழுந்தமானமான கப்பல் கூலி என்ற போர்வையில் அத்தியாவசியப் பொருள்களான மாவு, அரிசி, சீனி, பருப்பு, பால்மா உட்பட ஏனைய பொருள்களுக்கு மேலதிகமாக விலையைக் கூட்டி விற்பனை செய்யவுள்ளது. இப்படிப்பட்ட விலை உயர்வை தென்னிலங்கையில் அரசு கடைப்பிடிக்குமானால் அரசு தனது தலைவிதியை நிர்ணயிக்கும் சூழ்நிலை ஏற்படும்.

யாழ்மாவட்டத்தின் உணவு தேவைக்குப் பொறுப்பாக இருக்கும் அரச அதிபரும், உணவு விநியோகத்தை மேற்கொள்ளும் திட்டப்பணிப் பாளரும் இது சம்பந்தமாக அரசுக்கு வலியுறுத்தி ஆவன செய்யுமாறு யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

என்று உணர்ந்து செயற்படுகின்றனர். இதற்கு சிங்கள மக்களுக்கு அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பும் இருந்து வருகிறது.

சிங்கள மக்கள் வாழும் பல மாவட்டங்களில் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை மாணவர்கள்கல்விகற்கக் கூடிய வாய்புக்கள் உண்டு சில பெற்றோர்கள் மாதம் ஐயாயிரம் ரூபா வரையில் தன் பிள்ளையின் தனிப்பட்ட கல்விக்கு சிங்களவர்கள் செலவிடுகின்றனர். இவ்வித வாய்ப்பு (சிங்கள மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கு சாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலைக் கல்வியில் தான் ஒழுக்கம் திறமைகள் வளர்க்கப்படினும் பல்கலைக் கழக அனுமதிக்கான புள்ளிகளை பெறுவதற்கான பணியில் பாடசாலைகளுடன் தனியார் கல்வி நிறுவனங்களும் பங்கு வகிப்பதை மறுக்க முடியாது.

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளை முன்னணிப் பாடசாலையில் சேர்த்து அப் பாடசாலையூடாக மேலதிக வகுப்புக்கள் நடாத்த ஒழுங்கு செய்து தனியார் கல்வியை தடைசெய்ய வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாக செயற்படுவதனால் மாணவர்களுக்கிடையிலான போட்டி குறைவதால் அவர்களது பிள்ளைகள் இலகுவில் பல்கலைக் கழகம் செல்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கிறது இதனால் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பமும் உண்டாகிறது என்றார்.

மற்றும் வடக்கு கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி, பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு வி. ரி. செல்வரட்ணம், கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். சிவராசா, ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு சோ. நடராசா, ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் திரு ப. ஈஸ்வரநாதன், முன்னாள் கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா, உடுப்பிட்டி அதிபர் திரு. ந. அனந்தராஜ், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. சிற்றம்பலம், தொலைக்கல்வி போதனாசிரியர், திரு. ஸ்ரீபதி ஆகியோரும் கருத்துரை நிகழ்த்தினர். (யோ)

ரங்களை கொண்டு அவருக்கு மன்னிப்பு அளித்துள்ளார். இது ஜனநாயக விரோத செயல் என சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில்

## துப்பாக்கி

நேற்றுமாலை 7 மணியளவில் அராலிப் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீதே மண்டை தீவு இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது சுதுமலை தெற்கு மானிப்பாயைச்சேர்ந்த கந்தசாமி காந்தன் (வயது 13) என்பவர் படுகாயமடைந்தார். இவரது வயிற்றை துப்பாக்கிச்சன்னம் துளைத்துச் சென்றுள்ளது. இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிருமிநாசினியில்

அரைவாசிப் பகுதியில் மிளகாய் செய்கையில் ஈடுபட்டிருந்தார். மிளகாய்ச் செடிகள் காய்க்கும் பருவத்தில் நோய் தாக்காமல் தடுப்பதற்காக முன்கூட்டியே மருந்து தெளிப்பதற்கு அவர் முடிவு செய்தார். அதற்காக யாழ்ப்பாணம் வைத்திய சாலைக்கு பின்புறமாக அமைந்துள்ள கிருமிநாசினி விற்பனை செய்யும் கடையில் ''பேர்வெக்தியோன்'' என்னும் பெயரொட்டி ஒட்டப்பட்டிருந்த கிருமிநாசினியை கொள்வனவு செய்து மிளகாய்க் கன்றுகளுக்கு தெளித்திருந்தார். தெளித்து இரு தினங்களில் மிளகாய்க் கன்றுகள் அனைத்தும் கருகி நாசமாகின

இதனையடுத்து போத்தலிலிருந்தமிகுதி மருந்தினை எடுத்துச் சென்று அனுபவம் வாய்ந்த விவசாயிகளிடமும் உதவி விவசாயப் பணிப்பாளரிடமும் கேட்ட போது மேற்படி போத்தலில் இருந்தது புல்லு மருந்து என தெரியவந்தது. இதனையடுத்து மேற்படி விவசாயி உதவி விவசாயப் பணிப்பாளரின் உதவியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளார் என தெரியவந்துள்ளது. (88)

கொலை செய்ய திட்டமிட்டார் என்பதன் பேரில் குருணாகலை நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டு பொலிசாரினால் கைது செய்யுமாறு தீர்ப்பளிக்கப்பட்டவர் இதுவரை பொலிசாரினால் கைது செய்யப்படாமலும், சிறைத் தண்டனை ஒரு நாள் கூட அனுபவிக்காமலும் அவருக்கு இவ்வாறு மன்னிப்பு அளித்தது என்பது சட்டத்தை கேலி செய்யும் நடவடிக்கையாகும் இது அரசியல் அமைப்பினை துஷ்பிரயோகம்செய்ததற்கு சமமான ஒரு நிகழ்வு என மேலும் அவர் தெரிவித்தார்.

## சித்த மருத்துவ கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்தமருத்துவத்துறையினரால் கைதடி வளாகத்தில் இன்றுதொடக்கம் புதன் வரை சித்த மருத்துவக் கண்காட்சி நடாத்தப்படுகின்றது. இக் கண்காட்சி நோய் தொடர்பான அறிவையும், சுகாதாரம் பேணும் விடயங்களையும் மாணவர்கள் பெற உதவக்கூடியது. எனவே மாணவர்களை இக் கண்காட்சியைப் பார்த்துப் பயனடைய ஒழுங்கு செய்யுமாறு யாழ். வலயம் 2 கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

## ராமகிருஷ்ண ஜெயந்தி

நாளை செவ்வாய்க்கிழமை யாழ். வைத்தீஸ் வராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆசிரியர்கள், மாணவர்களால் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழா காலை 8. 30மணிக்கு வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது. பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் பரமஹம்சரைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தினரின் வீரத்துறவி விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றின் வில்லிசை நிகழ்ச்சியும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் இடம்பெறவுள்ளன.

# மரண அறிவித்தல்

## திருமதி ஐயாத்துரை இலட்சுமிப்பிள்ளை

(இலட்சுமி கடை உரிமையாளர் -காங்கேசன்துறை)

காலஞ்சென்ற ஐயாத்துரையின் மனைவியும் இலெட்சுமிகடை உரிமையாளருமாகிய இலட்சுமிப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் கனகாம்பிகையின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற மருசிலினின் (புகையிரத பாதுகாவலர்) அன்பு மாமியும் கலைச்செல்வி, ஜீவராஜ், கலையமுதா, ஜீவானந்தன், கலைவாணி, கோகிலன், கோமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (21-02-94) மு. ப. 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. கனகாம்பிகை
(மகள்)

145|16 (குமரன் படிப்பகம் அருகாமை),
நாவலர் வீதி,
ஐந்து சந்தி, நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(7580)

5ஆம் ஆண்டில் காலடிபதித்த
ஈழநாதத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

★ ஆங்கிலமருந்துகள்
★ பால்மா வகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்

நியாய விலையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சஞ்ஜீவி மருந்தகம்
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(சி-8682)